# பழந்தமிழ் இலக்கியங்களில் பாதுகாப்புப் பதிவுகள்

**முனைவர் மு.சங்கர்,**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழியல் துறை,*
*ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி – 626 130.*

**Defence Records in Ancient Tamil Literature**

Dr.M.Sankar, *Assistant Professor, Department of Tamil,*
*Sri Kaliswari College (Autonomous), Sivakasi – 626 130.*

***சுருக்கம்***

*பண்டைய தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்கின்றன. அவை இயற்கை பேரழிவுகளிலிருந்தும் எதிரிகளின் செயல்களிலிருந்தும் நாட்டைப் பாதுகாக்க கட்டப்பட்ட மலைகள், காடுகள், அகழிகள், கோட்டைகள் மற்றும் சுவர்கள். நாட்டிற்குள் நுழையும் புலவர்களையோ அல்லது வறியவர்களையோ பாதுகாப்பது மன்னரின் கடமையாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விலங்குகள் மற்றும் பறவைகளின் பாதுகாப்பு, பயிர் பாதுகாப்பு மற்றும் நீர் பாதுகாப்பு ஆகியவை பண்டைய காலத்தில் உறுதி செய்யப்பட்டன. பாதுகாப்பு என்பது தாக்குதல் அல்லது தீங்கிலிருந்து பாதுகாக்கும் திறன் அல்லது தாக்குதல் அல்லது தீங்கிலிருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் ஒன்று. எந்த ஆபத்து காரணிகளும் இல்லாத ஒரு நிலை பாதுகாப்பு என்று அழைக்கப்படுகிறது. இயற்கையின் அழிவை யாராலும் தடுக்க முடியாது. வெள்ளம், பஞ்சம் மற்றும் வறட்சி காரணமாக, நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி எதுவும் இல்லை. அதன்படி, நாட்டின் பாதுகாப்பில் மலைகள், காடுகள், அகழிகள் ஆகிய அரண்கள் இன்றியமையாதவை. படையெடுப்பால் நாடு அச்சுறுத்தப்படுவதைத் தடுக்க அரண்மனையில் கோட்டைகள் அமைக்கப்பட்டன. அவற்றைப் பாதுகாக்க வீரர்கள் அங்கு இருந்தனர். பண்டைய தமிழர்கள் பசுக்களைச் செல்வமாகக் கருதி அவற்றைப் பாதுகாத்தனர். ஒரு நாட்டை ஆக்கிரமிப்பதற்கு முன்பு எதிரியின் படைகளை ஈர்ப்பது வழக்கம். இவ்வாறு ஈர்க்கப்படும் பசுக்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதவாறு அவர்கள் அதைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்துள்ளனர். போர் சூழலிலும் பசுக்கள் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. பண்டைய தமிழர்கள் விலங்குகளை மட்டுமல்ல, பறவைகளையும் துன்பத்திலிருந்து பாதுகாத்துள்ளனர். பண்டைய தமிழர்கள் நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர். குளங்கள் மற்றும் தொட்டிகளில் தண்ணீர் சேமிக்கப்படுகிறது. பண்டைய மக்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தற்காப்புக் கலைகளை அறிந்திருந்தனர். இந்தக் கட்டுரையின் நோக்கம் பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பாதுகாப்பு பதிவுகளை வெளிக்கொணர்வதாகும்.*

***முக்கிய வார்த்தைகள்:*** *பாதுகாப்பு, நாடு, விலங்குகள், பறவைகள், நீர் மேலாண்மை.*

**தோற்றுவாய்**

பழந்தமிழர் நாட்டை இயற்கை அழிவில் இருந்து காக்கவும் பகையரசர் நடவடிக்கையில் இருந்து காக்கவும் மலை, காடு, அகழி, கோட்டை, மதில் ஆகியவற்றை அமைந்திருந்தனர். நாட்டிற்குள் வரும் இரவலரை அல்லது நாட்டில் வாழும் இரவலரைப் பாதுகாத்தல் அரசரின் கடமை ஆகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பும் விலங்கு, பறவைகளின் பாதுகாப்பும் பயிர் பாதுகாப்பும் நீர் பாதுகாப்பும் சங்க காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைக் குறித்த பதிவுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் எங்ஙனம் பதிவாகியுள்ளன? எனக் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பாதுகாப்பு - விளக்கம்**

Defense என்று அழைக்கப்பெறும் ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லாகப் பாதுகாப்பு என்ற சொல் அமைந்துள்ளது. இச்சொல்லிற்குக் கேம்பிரிட்ஜ் அகராதி, ***the ability to protect against attack or harm, or something used to protect against attack or harm*** (https://dictionary.cambridge.org/dictionary/english/defense) என்று விளக்கம் தருகின்றது. பாதுகாப்பு என்பது ஆபத்துக் காரணிகள் ஏதும் இல்லாத பாதுகாப்பு நிலையைக் குறிக்கும். இது தீங்கு விளைவிக்கும் காரணிகளில் இருந்து பாதுகாக்கப்படும் நிலையை உணர்த்தும். பாதுகாப்பு என்பது ஒரு முன்னெச்சரிக்கை செயல்பாடாகும். இயற்கை மற்றும் செயற்கை மூலமாகப் பல அழிவுகள் ஏற்படலாம். இவற்றிலிருந்து தப்பிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுண்டு. இப்பாதுகாப்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விலங்கு பாதுகாப்பு, கடல் பாதுகாப்பு, மனித பாதுகாப்பு என்ற நான்கு வகைகள் உள்ளன.

**இயற்கை அழிவு**

இயற்கையில் நிகழும் இடையூறுகளால் சுற்றுச்சூழல்களில் ஏற்படும் பாதிப்பே இயற்கை அழிவாகும். நிலநடுக்கம், சுனாமி, வெள்ளப்பெருக்கு, மழை பொய்த்தலால் ஏற்படும் பஞ்சம், கொள்ளைநோய் போன்றவை இதில் அடங்கும். இத்தகைய இயற்கை அழிவில் இருந்து நாட்டைப் பாதுகாக்க முடியாமையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். குமரியில் உள்ள பஃறுளி ஆறும் அதையொட்டிய குமரி மலையும் கடல்கோளால் அழிந்தன என்ற செய்தியை,

**பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள (சிலப்.11:19,20)**

என்ற அடிகளால் அறியலாம்.

பாண்டிய நாட்டில் மிகக் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. இப்பஞ்சம் சுமார் பன்னிரண்டாண்டுகள் நீடித்ததாகத் தெரிகின்றது. இதனால் பலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். செழியன் சேந்தன் ஆட்சியில் சீனப் பயணியான யுவான் சுவாங் பல்லவரின் தலைநகரான காஞ்சிக்கு வந்திருந்தார். அவர் பாண்டிய நாட்டிற்குப் புறப்படும் சமயத்தில் அந்நாட்டில் கடும் பஞ்சம் நிலவியது என்றும், அதனால் செழியன் சேந்தன் இறந்தான் என்றும் காஞ்சி மக்கள் தம்மிடம் கூறியதாகத் தமது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். மேலும், திருவிளையாடற் புராணத்தில் மேருவைச் செண்டால் அடித்த படலத்தில் மதுரையில் மழையின்றிப் பஞ்சம் ஏற்பட்டதைப் பரஞ்சோதியார் பதிவு செய்துள்ளார். இச்செய்தியை,

**மல்கு மாறுஇல் கோள் திரிந்து மழை சுருங்கி நதியும் நீர்**
**ஒல்கு மாறு பருவம் மாறி உணவு மாறி உயிர் எலாம்**
**மெல்குமாறு பசி உழந்து வேந்தனுக்கு விளைபொருள்**
**நல்கு மாறி இலமை இன்னல் நலிய வந்த நாடு எலாம் (திருவிளை.1116)**

என்ற பாடலின் வழி அறியலாம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

மழை பொய்த்தால் மலை சார்ந்த பகுதியும் காடு சார்ந்த பகுதியும் வளம் குன்றிப் பாலை நிலமாகக் காட்சி தரும் என்பதனைச் சிலப்பதிகாரம்,

**முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்**
**பாலை யென்பததோர் படிவங் கொள்ளும் (சிலப்.11:64-66)** என்கின்றது.

மேற்குறிப்பிட்ட சான்றுகளில் இருந்து இயற்கையால் ஏற்படும் அழிவுகளில் இருந்து நாட்டைப் பாதுகாக்க இயலாமையை உணர்ந்து கொள்ளலாம்.

**நாட்டின் பாதுகாப்பு**

காவற்காடு, அகழி, மலைகள் ஆகியவை நாட்டின் பாதுகாப்பிற்குரியன. இவை எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் பாங்கின. தமிழ்நாட்டின் எல்லைகளாகப் பனம்பாரனார்,

**வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகத்து (தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம்)** என்கின்றார். இவரது இக்கூற்றுத் தமிழகம் பாதுகாக்கப்பட்ட அரண்களைக் கொண்டதாக அமைந்திருந்ததை உறுதிப்படுத்துகின்றது. அரண் என்பது பாதுகாவலுள்ள இடத்தைக் குறிக்கும். நச்சினார்க்கினியர், *“மலையரணும் நிலவரணுஞ் சென்று சூழ்ந்து நேர்தலில்லா ஆரதர் அமைந்தனவும் இடத்தியற்றிய மதில் போல அடிச் சிலம்பின் அரணமைந்தனவும் மீதிருந்து கணை சொரியும் இடமும் பிற எந்திரங்களும் அமைந்தனவாம். இனிக் காட்டரணும் நீரரணும் அவ்வாறே வேண்டுவன யாவும் அமைந்தனவாம்”* என்கின்றார். (தொல்.பொருள்.புறத்.10)

மதுரை மாநகர் எதிரிகள் நுழையா வண்ணம் பாதுகாப்பட்டதாக அமைந்திருந்தது என்பதை இளங்கோவடிகள் அடைக்கலக் காதையில் பதிவு செய்துள்ளார். மதுரை காவற்காடும் அகழியும் வளைந்து தானே எய்யும் இயந்திர வில்லும் கரியவிரலினையுடைய கருங்குரங்கு போன்ற பொறியும் கல்லினை வீசுகின்ற கவணும் சேர்ந்தாரைத் துன்புறுத்துகின்ற வெம்மை மிக்க நெய்யும் செம்பினை உருக்குகின்ற குழிசிகளும் இரும்பு காய்ந்து உருகற்கு வைத்த உலைகளும் கல் நிறைய இடப் பெற்ற கூடைகளும் தூண்டிலும் கழுத்திற் பூட்டி முறுக்கும் சங்கிலியும் ஆண்டலைப் புள் வடிவாகச் செய்த அடுப்புகளும் அகழியினின்று ஏறின் தள்ளுகின்ற இருப்புக் கப்புகளும் கழுவும் அம்புக் கட்டுகளும் ஏவறைகளும் தன்னை நெருங்கினார் தலையை நெருக்கித் திருகும் மரங்களும் மதிலின் தலையைப் பற்றுவார் கையை நடுங்கச்செய்யும் ஊசிப் பொறிகளும் பகைவர்மேற் சென்று தாக்கும் சிச்சிலிப் பொறியும் மதிற்கண் ஏறினாரைக் கோட்டாற் கிழிக்கும் பன்றிப் பொறியும் மூங்கில் வடிவாகப் பண்ணி அடித்தற்கு வைத்த பொறிகளும் கதவிற்கு வலியாக உள்வாயிற்படியிலே நிலத்திலே வீழ விடுமரங்களும் மிக்க வலிபொருந்திய கணைய மரங்களும் எறிகோலும் குந்தமும் வேலும் முதலியனவும் ஞாயிலும் குருவித் தலைகளும் மதிற்குரிய ஏனைய பொறிகள் முதலியனவும் **(சிலப்.15:207-216)** மிகுந்து இருந்தமையைக் குறிப்பிட்டுள்ளார் இளங்கோவடிகள்.

பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையின், கோட்டை வாயில்களை யவன வீரர்கள் காவல் காத்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் பகருகின்றது. இதனை,

**கடிமதில் வாயில் காவலிற் சிறந்த**
**அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு (சிலப்.14: 66,67)**

என்ற அடிகள் வழி உணர்ந்து கொள்ளலாம்.

குறிஞ்சி நிலத்தில் ஊர்க்காவல் பற்றிய குறிப்பினை அறியலாம். காவலர் குறிஞ்சிப்பண்ணைப் பாடிக் கொண்டு இரவு முழுவதும் தூங்காமல் ஊர்க்காவல் செய்தனர் என்பதையும் நெய்தல் நிலத்தில்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

காவலர்கள் இரவு முழுவதும் மணியடித்து ஓசை எழுப்பியவாறு இருந்தனர் என்பதையும் நற்றிணை (255, 132) மூலமாகக் காணலாம்.

பாண்டியனுடைய பாசறையில் யவன வீரர்கள் இருந்ததை முல்லைப்பாட்டு கூறுகின்றது.

**..... செறிவுடை**
**மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து**
**வலிபுணரி யாக்கை வன்கண் யவனர் (முல்.பா.59-61)**

அரசர்கள் தமது ஆட்சியில் ஒற்றர்களையும் தூதுவர்களையும் வைத்திருந்தனர் (அகம்.313, 337). ஏனெனில், நாட்டிற்கு எந்தத் தீங்கும் பகையரசர்களால் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தான்.

தமிழ் மன்னர்கள் எயினரைப் போர் வீரராக்கி நாடு காவற் பணியில் அமர்த்தி இருந்தனர். பாலை வழியில் வருவோர்க்குத் தீங்கு நேராது காப்பதே இவர்களது கடமை. மதுரைக்காஞ்சியில் காவலர்கள் காத்து நின்றமையை,

**உவலைக் கண்ணி வன்சொல் இளைஞர்**
**சிலையுடைக் கையர் கவலை காப்ப**
**நிழலுரு விழந்த வேனிற்குன் றத்துப்**
**பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார் (மது.கா.310-314)**

என்ற அடிகளில் காணலாம்.

மலைபடுகடாமில் நவிர மலை செல்லும் வழியில் காவற்காடுகள் இருக்கும். அக்காட்டைச் சூழ்ந்து அகழிகள் காணப்பெறும். அவற்றுள் யானையை விழுங்கும் முதலைகள் இருக்கும். ஒருவர் அகழியில் இறங்குவதும் அரிது, அகழியில் இருந்து கரைக்கு ஏறுவதும் அரிது. அப்பாதையில் மரங்களில் சுற்றிக் கிடக்கின்ற கொடிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு கால் வழுக்கலைத் தவிர்ந்து தப்ப வேண்டும். ஒருவரை ஒருவர் பாதுகாத்துச் செல்ல வேண்டும். மலையெருக்கு அடர்ந்து வளர்ந்த பக்கமலையில் வீழ்ந்தோரை மறைக்கும் ஆழமுடைய குளங்களுக்கு அருகில் பாசி படர்ந்திருக்கும். அதன்மீது கால் வைப்பர் வழுக்கி வழுவர். அவ்வழியில் போதல் அரிது என நன்னனது மலைநாடு கூறப்படுகின்றது (மலைபடு.211-224).

மணிமேகலையில் வஞ்சி மாநகரம் பாதுகாப்பாக இருந்ததைக் காணலாம் (மணி.28:1-74). வஞ்சி நகர அமைப்பில் அகழி, கோட்டை மதில், வாயில், கோட்டையுள் தெருக்கள் ஆகியவை பாதுகாப்புடன் இருந்ததை மணிமேகலை வழி அறிய நேர்கின்றது.

கரிகாலன் உறந்தையின் மதிலில் பெரிய வாயில்களையும் சிறிய வாயில்களையும் அமைத்திருந்தான். மதிலின் மீது இருந்து அம்புகளை எய்து மறையும் சூட்டுதோறும் அம்புக்கட்டுகளைக் கட்டி வைத்திருந்தான் என்று பட்டினப்பாலை கூறுகின்றது. இதனை,

**பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்**
**கோயிலொடு குடிநிறீஇ**
**வாயிலொடு புழையமைத்து**
**ஞாயிறொறும் புதைநிறீஇ (பட்டி.285-288)**

என்ற அடிகள் பகர்கின்றன.

புறப்பொருள் வெண்பா மாலை வாகைப்படலத்துள் காவல் முல்லை என்ற துறை பற்றிப் பேசுகின்றது. வேந்தன் இவ்வுலகைக் காக்கும் செயலைக் கூறுவதே காவல் முல்லை. மக்களுக்கு எந்தத் தீங்கும் நேராதவாறு காக்க வேண்டியது வேந்தனின் கடமை ஆகும் என்றும் பகைவர் இல்லாமல் ஆக்கி, வானத்தைக் காவல் காக்கும் தந்தை வழியில் நின்று ஆள வேண்டும் என்றும் ஆறில் ஒரு பங்கினை

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

வரியாகப் பெற்று, அதைப் பிறருக்கு அளித்து வாழ வேண்டும் என்றும் சான்றோர்கள் கூறிய நெறியில் இருந்து வழுவாமல் நாட்டைக் காக்க வேண்டும் என்றும் ***காவல் முல்லை*** துறை கூறுகின்றது (புற.வெ.மா.179).

பாரியின் பறம்பு மலை நீர்ச்சுனைகளையும் (புறம்.176) சந்தன மரங்களையும் வேங்கை மரங்களையும் (புறம்.108) மூங்கில் நெல்லையும் பலா மரங்களையும் வள்ளிக்கிழங்குகளையும் தேனையும் (புறம்.109) கொண்டனவாக அமைந்திருந்தன என்பதைச் சங்கப் பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.

பாரியின் பறம்பு மலையைத் தவிர கொல்லி, நன்றா, முதிர, இமயம், குடமலை, தோட்டி மலை, பொதிய மலை, பொதினி மலை உள்ளிட்ட மலைகளைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. இவை பல்வேறு வளங்களை உள்ளடக்கியனவாக உள்ளன.

இவ்வுலகமானது வெள்ளத்தில் மூழ்கிய போது, திருமால் வராக அவதாரம் எடுத்தார் என்பதைப் பரிபாடல் புராண ரீதியாகப் பதிவு செய்துள்ளது. இதனை,

**புருவத்துக் கருவல் கந்தரத்தால்**
**தாங்கி இவ்வுலகம் தந்து அடிப்படுத்ததை நடுவண்**
**ஓங்கிய பலர்புகழ் குன்றினோடு ஒக்கும் (பரி.4:22-24)**

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

**விலங்கு பாதுகாப்பு**

இன்று விலங்குகளின் பாதுகாப்புக் கேள்விக்குறியாக இருப்பதைச் செய்தித்தாள் குறிப்புகள் வழியாக உணர்ந்து கொள்கின்றோம். யானைகள் பல மின் வேலிக் கம்பிகளில் சிக்கியும் தொடர்வண்டிப் பாதையில் சிக்கியும் உயிர் இழக்கும் சூழலைக் காண்கின்றோம். பறவையினங்களும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றன. இந்நிலையை மாற்றியமைக்க அரசும் அரசு சாராத தன்னார்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் பண்டைய காலத்தில் ஆநிரைகள் நாட்டின் செல்வமாகக் கருதப்பட்டன. எனவே, அவற்றைப் பாதுகாத்தல் முக்கியக் கடமையாக இருந்தது. ஒரு வேந்தனால் அனுப்பப்படும் வீரர்கள் பகைவர் காட்டிலுள்ள பசுக்கூட்டங்களைக் களவில் கவர்ந்து வந்து பாதுகாத்தல் வெட்சித்திணை ஆகும். ஆநிரை கவர்தலில் பகைவரின் பசுக்கூட்டங்களுக்கு உணவினை வழங்கி, அவற்றிற்கு ஊறு விளைவிக்காமல் ஓட்டிச் செல்லும் நிகழ்வு தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இதனைப் ***புகழ் சுரத்து உய்த்தல், தலைத் தோற்றம்*** என்ற வெட்சித் துறைகள் உறுதிப்படுத்தும்.

போர் நடைபெறவிருக்கும் சூழலில் யாரையெல்லாம் உய்வித்தல் வேண்டும் என்பதைப் புறநானூறு 9 ஆம் பாடல் கூறுகின்றது.

**ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் (புறம்.9)**

இகல் குறித்த வேந்தர் இருவரும் ஒருவர் போர்த் தொடக்கமாகப் பகைவர் நாட்டின் மேல் படையொடு சென்று, அந்நாட்டில் வாழும் அறவோராகிய அந்தணர், மகளிர், பணியாள் முதலிய தீங்கு செய்யத் தகாத மக்களால் போரால் விளையும் துன்பங்களினின்றும் விலக்கி உய்வித்தல் வேண்டி, "யாம்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

போர் கருதி நுமது நாட்டிற் புகுகின்றோம், நீவிர் நுமக்குப் பாதுகாவலான இடங்களை நாடிச் செல்லுமின்" என அறிவிப்பர். அதன் பிறகே போர் நடைபெற்றுள்ளது.

**பறவைகளைப் பாதுகாத்தல்**

வயலில் அறுவடை செய்யும் உழவர்கள் அங்குத் தமக்குத் தெரியாமல் வாழும் பறவைகளை விரட்ட தண்ணுமையை முழங்கினர். ஏனெனில், தண்ணுமை ஒலி கேட்டு அவை பறந்துவிடும். தண்ணுமை முழங்காவிட்டால் அவை அறுவடையில் உயிரிழக்கும். இஃது உழவர்களின் அருளுணர்ச்சியைக் காட்டுகின்றது. இதனை **வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக் (புறம்.348:1)** எனவரும் அடியால் அறியலாம்

**இரவலரைப் பாதுகாத்தல்**

அரசர்கள் தம்மை நாடி வரும் பரிசிலர்களைப் பேணியுள்ளனர் என்பதைப் புறப்பாடல்கள் வாயிலாக அறியலாம். குமணனிடம் பரிசில் வேண்டிச் செல்லும் பெருஞ்சித்திரனார் பாரி, ஓரி, திருமுடிக்காரி, அதியன், பேகன், ஆய், நள்ளி என்னும் வள்ளல்கள் இறந்த பின் பாடி வருநர், பிறர் ஆகியோரது துன்பத்தைத் தீர்க்க வல்லவன் நீயே என உன்னிடம் வந்தேன் (புறம்.158) எனப் பாடுவதும் கொடைப் பண்பே இவர்களின் தலையாய பண்பாய் இருந்ததைக் காட்டுகின்றது.

மன்னர்கள் தம்மை நாடி வரும் இரவலர்களுக்கு வரிசையறியாது வரையறையில்லாக் கொடை வழங்கினர் (புறம்.317, 329).

பரிசில் கடாநிலை, பரிசில் விடை, பரிசில் துறை, பரிசில் நிலை ஆகிய புறத்துறைகள் மன்னர்கள் அல்லது அரசர்கள் கலைஞர்களைப் பாதுகாக்கும் நிலையைக் காட்டுகின்றன.

சான்றோர் பிறருற்ற வறுமைக்கு அஞ்சி அவர்கள் இரந்தவற்றைக் கொடுத்துள்ளனர். பிறருக்குத் தம்முயிரை மகிழ்ச்சியோடு கொடுக்கவும் சித்தமாயிருந்தனர் என்பதை,

**இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய**
**கொடுத்தவை தாவென் சொல்லினும்**
**இன்னா தோநம் இன்னுயிர் இழப்பே (குறுந்.349:5-7)**

என்ற குறுந்தொகை அடிகளின் மூலமாக அறிய நேர்கின்றது.

அகப்பாடல் தலைவன் ஒருவன் செல்வத்தை ஈட்ட வேண்டியதன் அவசியத்தைக் கூறுகின்றான். இதனை அகநானூறு 389 ஆம் பாடல் காட்டுகின்றது.

**இரப்போர் ஏந்து கை நிறைய புரப்போர்**
**புலம்பு இல் உள்ளமொடு புதுவ தந்து உவக்கும்**
**அரும் பொருள் வேட்டம் எண்ணி (அகம்.389:11-13)**

குறிஞ்சி நிலத் தலைவன் தன்னை நாடி வந்த புலவர்களுக்குத் தேர்களையும் களிறுகளையும் கொடுத்தான் என்பதைக் கலித்தொகையில் (50) காண்கின்றோம்.

பதிற்றுப்பத்தில் சேரர்கள் தம்மைப் பாடிய புலவரக்ளுக்குப் பரிசில்களை வழங்கிப் பாதுகாத்துள்ளனர் என்ற செய்தியை அறியலாம். களங்காய்க்கன்னி நார்முடிச் சேரல் காப்பியாற்றுக் காப்பியனார்க்கு நாற்பது நூறாயிரம் பொன்னையும் தான் ஆண்ட நாட்டின் ஒரு பகுதியையும் பரிசிலாக அளித்துப் புரந்துள்ளான். காக்கை பாடினி நச்செள்ளையாருக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஒன்பது காப் பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசிலாய் வழங்கினான்.

**அகப்பாடல்களில் தலைவியின் பாதுகாப்பு**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

சங்க அகப் பாடல்களைப் பொறுத்த வரையில் தலைவியைப் பாதுகாத்தல் தோழி, தலைவன், பெற்றோர் ஆகியோரின் கடமையாக அமைந்துள்ளது. தலைவி பெற்றோரின் கட்டுக்காவலை மீறித் தலைவனோடு உடன்போக்கு சென்றுள்ளாள் என்பதைப் பாலைத்திணைப் பாடல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். அகநானூறு 17 ஆவது பாடல் மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியதாக அமைந்துள்ளது. வளையல் அணிந்த தோழிமார் சுற்றத்தையோ எம்மையோ தலைவி நினைக்கவில்லை. நெடுமொழி கூறிப் பாதுகாத்த தந்தையின் காப்பகத்தை விட்டு நீங்கிவிட்டாள். இவ்வுடன்போக்கு பெற்றோர் உடன்படாத நிலையிலேயே நிகழ்ந்துள்ளது.

**வளம் கெழு திரு நகர்ப் பந்து சிறிது எறியினும்**
**இளந் துணை ஆயமொடு கழங்கு உடன் ஆடினும்**
**உயங்கின்று அன்னை என் மெய் என்று அசைஇ**
**மயங்கு வியர் பொறித்த நுதலள் தண்ணென**
**முயங்கினள் வதியும் மன்னே! இனியே**
**தொடி மாண் சுற்றமும் எம்மும் உள்ளாள்**
**நெடு மொழித் தந்தை அருங் கடி நீவி**
**நொதுமலாளன் நெஞ்சு அறப் பெற்ற என்**
**சிறு முதுக்குறைவி சிலம்பு ஆர் சீறடி**
**வல்லகொல் செல்லத் தாமே (அகம்.17:1-10)**

**பயிர் பாதுகாப்பு**

சங்க காலத்தில் தினைப் பயிர்களைப் பறவைகளிடமிருந்தும் விலங்குகளிடமிருந்தும் பாதுகாக்கும் நிலையை இருந்துள்ளது. தினை விளைவித்துப் பயிர் நன்றாக விளைந்த நிலையில் அதனைப் பாதுகாக்க பகலில் பெண்கள் சென்றுள்ளனர். இரவில் ஆண்கள் சென்றுள்ளனர் (ஐங்.282). தினைப்புனக் காவலைத் திருமணம் ஆகாத மகளிரே செய்துள்ளனர்.

தினைப்புனத்தில் புலி போல் உருவம் அமைத்து விலங்குகள் தினைப் பயிரை அழிக்காதவாறு குறவர்கள் பார்த்து வந்தனர் என்பதை ஐங்குறுநூறு (246) பதிவு செய்துள்ளது.

**கடற் கொள்ளையர்களை அழித்தல்**

கடம்பர்கள் கடல்மீது செல்லும் வணிகர்களின் பொருள்களைக் கொள்ளையிடும் செயலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களை அழித்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பாதுகாத்தான் என்ற செய்தியைப் பதிற்றுப்பத்துப் பகர்கின்றது. இதனை,

**வயவர் வீழ வாள்அரில் மயக்கி**
**இடர்கவர் கடும்பின் அரசுதலை பனிப்ப**
**கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே (பதி.12:1-3)**

என்ற அடிகளின் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், கடலிலிருந்து தொல்லை தந்த கடம்பர்களை வென்றான் என்பதை,

**கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு**
**உடைதிரைப் பரப்பின் படுகடல் ஓட்டிய**
**வெல்புகழ்க் குட்டுவன் (பதி.46:11-13)**
**கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்**
**கடலொடு உழந்த பினத்துறைப் பரதவ (பதி.48:3,4)**

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR

என்ற அடிகளில் கபிலர் பதிவு செய்துள்ளார்.

**நீர் பாதுகாப்பு**

பண்டைத்தமிழர் நீரின் இன்றியமையாமையை உணர்ந்து அதனைப் பாதுகாத்தனர். ஏரி, குளம், குட்டை, மடு, மதகு, அணை ஆகிய இடங்களில் சேமித்து வைத்துள்ளனர். இதனைப் பின்வரும் சங்க இலக்கிய அடிகள் உறுதிப்படுகின்றன.

**வறுமை கூரிய மண்நீர் சிறுகுளம் (அகம்.121:5)**

**ஊர்உண் கேணி உண்தொக்க (அகம்.399:1)**

**வையை உடைந்த மடை அடைத்த கண்ணும் (பரி.6:82)**

கரை உடைந்து தீமை விளையாதிருக்கும் பொருட்டுக் காவலர்களை நியமித்தல் பண்டைய மரபு. சேமித்து வைக்கும் நீரைப் பாதுகாக்க காவலன் ஒருவனையும் நியமித்திருந்தனர் என்பதை,

**எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்**

**பெருங்குளம் காவலன் போல (அகம்.252:12,13)**

என்ற அடிகளின் வழி அறியலாம்.

**தற்காப்பு**

தொல்காப்பியர் புறத்திணையியலில் நூழில், தழிஞ்சி, குறுமை, ஆகிய துறைகளில் வீரர்கள் தம்மைத் தாக்க வரும் பகைவரைத் தாக்கி நிற்கும் தற்காப்பு நிலைகளைக் கூறியுள்ளார்.

**வருவிசைப் புனலைக் கற்சிறை போல**

**ஒருவன் தாங்கிய பெருமை (தொல். பொருள்.புறத்.7)**

என வரும் உவமை மூலம் ஒருவன் தனியாளாக நின்று வாளை ஏந்தி வலிமையுடன் போர்புரிந்து பகைவரின் படை, தன்னைக் கடந்து வராமல் தடுத்தான் என்ற செய்தியைக் காண நேர்கின்றது.

எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பழந்தமிழர் சிலம்பம், மல்யுத்தம் போன்ற தற்காப்புக் கலைகளைக் கற்றிருந்தனர்.

சிலப்பதிகாரத்தில் சிலம்பம் ஆடுவதற்கான கம்பு, கத்தி போன்றவற்றைக் கடையில் விற்றுள்ளனர். அவற்றை வெளிநாட்டார் வாங்கிச் சென்றுள்ளனர் என்ற செய்தியைக் காண நேர்கின்றது. மேலும், மல்யுத்தம் பற்றிய குறிப்பைக் காணலாம். மாதவி ஆடிய பதினொரு வகையான ஆடல்களுள் ஒன்றாக மல்லாடல் குறிக்கப்படுகின்றது. இது போலச் செய்தல் கலையாக மாதவியால் நிகழ்த்தப்பட்டுள்ளது (சிலப்.6:49).

பொருநர் கூட்டம் தாம் செல்லும் பாலை வழியில் ஆறலைக் கள்வர்களின் தாக்குதலில் இருந்து விடுபட பாலைப் பண்ணை இசைத்துப் பாடிக் கொண்டு செல்வர். இதனால், ஆறலைக் கள்வர் மனம் மாறி வழிப்பறிச் செய்வதில் இருந்து மாறுபடுவர் இதனைப் பொருநராற்றுப்படையில் காணலாம்.

**ஆறலைக் கள்வர் படைவிட அருளின்**

**மாறுதலை பெயர்க்கு மருவுஇல் பாலை (பொரு.21,22)**

யாழிசையை மீட்டி, பொருநர் தம்மைத் தற்காத்துக் கொண்ட நிலையை அறியலாம்.

**செல்வப் பாதுகாப்பு**

செல்வத்தின் மதிப்பை உணர்ந்த நந்தர்கள், தங்கள் செல்வங்களைக் கங்கையாற்றின் அடியில் புதைத்து வைத்துப் பாதுகாத்திருந்தனர் என்பதை அகநானூறு வழி அறிந்து கொள்ளலாம்.

**பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்**

**சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை**

**நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ (அகம்.265:4-6)**


© 2025, IRJTSR

இவ்வாறு பாதுகாக்கப்பட்ட செல்வங்களை வைத்து, அறம் செய்ய வேண்டும். மண்ணில் வாழும் உயிர்களுக்கு எல்லாம் உண்டி, உடை, உறையுள் ஆகியவை தருதல் அவசியமாகும். இவற்றிற்குப் பயன்படாத செல்வம் நன்றியில் செல்வம் (திருக்குறள் - 110 ஆவது அதிகாரம்) ஆகும். வள்ளுவரும் இதனை வலியுறுத்தியுள்ளார். செல்வமே மனிதனுக்கு ஆக்கத்தை நல்கும். அற இலக்கியக் காலகட்டத்தில் இந்தப் பொருட் செல்வம் பெரிதாகப் பேசப்படவில்லை. அதைவிட மேலானதாகக் கருதப்படும் கல்விச் செல்வம், கேள்விச் செல்வம், அருட் செல்வம் ஆகியனவே பேசப்பட்டுள்ளன.

**இறுவாய்**

பழந்தமிழ் இலக்கியங்களில் பாதுகாப்புப் பதிவுகள் என்ற தலைப்பில் ஆராயப்பட்டுள்ள கருத்துகள் இவண் தொகுத்துத் தரப்படுகின்றன.

ஆபத்துக் காரணிகள் ஏதும் இல்லாத நிலைமையைப் பாதுகாப்பு என்பர். இயற்கையின் அழிவை யாராலும் தடுக்க இயலாது. வெள்ளம், பஞ்சம், வறட்சி ஆகிய காரணங்களால் நாட்டின் பாதுகாப்புக் கேள்விக்குறியாக இருந்துள்ளது. இயற்கைக்கு மீறிய ஆற்றல் இல்லை என்பர். அதற்கேற்ப நாட்டின் பாதுகாப்பில் மலைகள், காடுகள், அகழிகள் ஆகிய அரண்கள் இன்றியமையாதனவாக உள்ளன. படையெடுப்பில் நாட்டிற்கு ஆபத்து ஏற்படா வண்ணம் தடுக்க அரண்மனையின் கோட்டைகள் அமைந்திருந்தன. அவற்றைப் பாதுகாக்க வீரர்கள் இருந்துள்ளனர். பண்டைய தமிழர் ஆநிரைகளைச் செல்வமாகக் கருதிப் பாதுகாத்தனர். ஒரு நாட்டின் மீது படையெடுக்கச் செல்வதற்கு முன் பகைநாட்டின் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்துள்ளது. அவ்வாறு கவர்ந்து வரும் ஆநிரைகளுக்கு ஆபத்து நேராதவாறு பாதுகாத்தே கொண்டு வந்துள்ளனர். போர் நடைபெறும் சூழலில் கூட ஆநிரைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

தொல் தமிழர் விலங்குகளுக்கு மட்டுமின்றி, பறவைகளுக்கும் துன்பம் நேராதவாறு பாதுகாத்துள்ளனர். ஐவகை நிலங்களுக்கேற்ப இவை கூறப்பட்டுள்ளன. பயிர்களைப் பாதுகாக்க கிளிகடி கருவி பயன்படுத்தப் பட்டிருந்தாலும், அது பறவைகளை விரட்டவே பயன்படுத்தப்பட்டது. பயிர் அறுவடையின்போது தண்ணும்மை அடிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இதனால் பயிர்களில் கூடு கட்டி வாழும் பறவைகளின் உயிர் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை அறியலாம். பரிசிலரைப் பாதுகாத்தல் அரசர்களின் கடமையாக இருந்துள்ளது. குடும்பத்தைப் பாதுகாத்தல் தலைவன், தலைவியின் கடமையாக இருந்துள்ளது. அதில் இன்றியமையாததாகச் சுற்றம் தழால் இருந்துள்ளது.

நீர் மேலாண்மையில் பண்டைத் தமிழர் சிறந்து விளங்கினர். நீரைக் குளம், கேணி, மடை ஆகியவற்றில் சேமித்து வைத்துள்ளனர். நீரைப் பாதுகாக்கப் பாதுகாவலர்களை நியமித்திருந்தனர் என்பதை அறியலாம். பழந்தமிழர் தம்மை எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள தற்காப்புக் கலைகளை அறிந்திருந்தனர். சிலம்பம், மல்யுத்தம், போர்க் கருவிகளைக் கையாளும் திறன் ஆகியவற்றைக் கூறலாம். நந்தர்கள் கங்கையாற்றில் செல்வங்களைப் புதைத்து வைத்துப் பாதுகாத்துள்ளனர். இவ்வாறு பாதுகாக்கப்படும் செல்வத்தை அறச் செயலுக்குப் பயன்படுத்த வேண்டும் என அற நூல்களைப் பாடியவர்கள் கூறியுள்ளனர்.

**துணை நின்ற நூல்கள் / Reference Books**

[1] ஆலிஸ், அ (உ.ஆ) பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை, 2004 (முதற்பதிப்பு).

[2] இராகவையங்கார்,உ.வே.ரா., (உ.ஆ) அகநானூறு மூலமும் உரையும், வே.இராஜகோபாலையங்கார் பதிப்பு, கம்பர் விலாஸம், மயிலாப்பூர், 1923.

[3] இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதல் பகுதி), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1953 (முதற்பதிப்பு).


© 2025, IRJTSR

[4] இளம்பூரணர், (உ.ஆ) தொல்காப்பியம், எழுத்ததிகாரம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை, 2000 (12 –ஆம் பதிப்பு).

[5] சாமிநாதையர், உ.வே., (உரை), குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. நிலையம், சென்னை, 2009 (முதற்பதிப்பு).

[6] சாமிநாதையர்,உ.வே., (குறிப்புரை) ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2012 (7 – ஆம் பதிப்பு).

[7] சாமிநாதையர், உ.வே. (ஆராய்ச்சிக் குறிப்பு), புறநானூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2014 (8 – ஆம் பதிப்பு).

[8] சுப்பிரமணியன், பெ. (மற்றும் பிறர்) பரிபாடல் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை, 2004 (முதற்பதிப்பு).

[9] செயபால், இரா., (உரை), அகநானூறு (புத்தகம் - 1 & 2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை, 2004 (முதற்பதிப்பு).

[10] நச்சினார்க்கினியர், (உ.ஆ) கலித்தொகை மூலமும் உரையும், (அனந்தராமையரால் நன்கு பரிசோதித்து, தாம் புதிதாக எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புடன்), நோபிள் அச்சுக்கூடம், சென்னை, 1925.

[11] நாகராசன், வி (உ.ஆ) பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004 (முதற்பதிப்பு).

[12] பாலசுப்பிரமணியன், கு.வெ., (உரை), நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004 (முதற்பதிப்பு).

[13] புலியூர்கேசிகன் (தெளிவுரை), மணிமேகலை, பாரி நிலையம், சென்னை, 2009 (மறுபதிப்பு)

[14] மோகன், இரா. (உ.ஆ) பத்துப்பாட்டு முதற்பகுதி (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004 (முதற்பதிப்பு).

[15] வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உரை) சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், முல்லை நிலையம், சென்னை, 2003 (முதற்பதிப்பு).

[16] வேங்கடராமன்,எச்., (ப.ஆ) நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2013 (3 – ஆம் பதிப்பு).

[17] https://dictionary.cambridge.org/dictionary/english/defense

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*